23rd March 1965]

கனம் திரு. பூ. கக்கன் : அம்மாதிரி குழு அமைக்கவேண்டிய அவசியமில்லை. விவசாயப் பெருங்குடி மக்களுக்கு பழச் செடி வைப்ப தற்கு கடன் கொடுத்து 10 வருஷ தவணையில் வாங்குவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது.

திரு. ஆ. துரையரசன் : கொடுக்கப்பட்ட கடன்கள் பெரும்பாலும் ஒழுங்காக செலவழிக்கப்படுவதில்லை. பல இடங்களில் செடிகளை நடா மலேயே கூட, பணத்தை வாங்கி சொந்த உபயோகத்திற்காக பயன் படுத்தியிருக்கிறார்கள் என்று எதாவது அரசினருக்கு புகார் வந்திருக் கிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : அப்படியும் சமுதாயத்தில் ஒரு சில பேர்வழிகள் இருப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோ. சி. மணி : நீண்டகாலக் கடன், குறுகிய காலக்கடன் கொடுப்பதற்கான தொகை மாவட்ட வாரியாக ஒதுக்கப்பட்டிருக்கிறதா ? அல்லது தோட்டங்கள் எங்கே அதிகமாக இருக்கிறதோ அந்தப் பகுதிகளைப் பார்த்து தரப்படுகிறதா ?

கனம் திரு. பூ. கக்கன் : எங்கெல்லாம் பழச்செடிகள் வைப்பதற்கு விவசாயப் பெருங்குடி மக்கள் முன்வருகிறார்களோ, அதைப் பார்த்து அனுசரித்து கடன் கொடுக்கப்பட்டு வருகிறது.

Cause-way under Albert Victor Bridge, Madurai

* 311 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal to open a cause-way road under he Albert Victor Bridge, Madurai City, connecting Alwarpuram and the road in front of Panagal Buildings ; and

(*b*) if so, the details thereof?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) ஆம்.

(இ) மதுரை—திண்டுக்கல் சாலையின் 298–2 மைலில் வைகை ஆற்றின் குறுக்கேயுள்ள ஆல்பெர்ட் விக்டர் பாலத்தின் வடக்குப் பக்க வழியில், ஆழ்வார்புரம் சாலையையும் கிளைச்சாலையையும் (கல்பாலம்) இணைக்க, நகராட்சி மன்ற நிதியிலிருந்து தாம்போகி (Cause-way) ஒன்றைக் கட்ட மதுரை நகராட்சி மன்றம் உத்தேசித்துள்ளது. இதனால் கோரிபாளையம் சந்திப்பில் போக்குவரத்து நெரிசல் குறையும். இத் திட்டத்திற்காக 2,76,850 ரூபாய்க்கு நிர்வாக முறையில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இவ்வேலையை "டிபாசிட்" வேலையாக எடுத்து நிறைவேற்றும்படி (நெடுஞ்சாலை, கிராமப் பணிகள்) தலைமைப் பொறி யாளர் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. வை. சங்கரன் : எப்பொழுது இந்த வேலை எடுத்துக்கொள்ளப் படும் ? எப்பொழுது முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அட்மினிஸ்டிரேடிவ் சாங்ஷன் கொடுக்கப்பட்டு, வேலை செய்வதற்கு பி.டபிள்யு.டி. மூலம் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. எப்பொழுது வேலை ஆரம்பிப்பார்கள் என்ற திட்டமான தகவல் என்னிடம் இல்லை.

Honorarium to Municipal Councillors

* 312 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Government have proposed to permit Municipalities to pay its councillors, honorarium or atleast sitting fees on the days of meeting; and

(*b*) if so, the details thereof?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வை. சங்கரன் : மதுரை போன்ற முனிசிபாலிடிகளில் இது போன்று வேண்டுகோள் விடுத்து, அரசாங்கத்திற்கு தீர்மானம் போட்டு அனுப்பியும்கூட, அதை மறுப்பதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : 1960-ம் வருஷத்தில்கூட முனிசிபல் சேர்மன்ஸ் கான்பெரன்ஸில் இதைப் பற்றி தீர்மானம் பாஸ் பண்ணி சர்க்காரின் கவனத்திற்கு வந்தது. தேசீய நெருக்கடி காரணமாக இப்பொழுது அதை புனர் பரிசீலனை செய்வதற்கு காரணம் இல்லை என்று சர்க்கார் கருதுகிறது.

திரு. வை. சங்கரன் : சாதாரணமாக நகராட்சி மன்ற உறுப்பினர்கள் தினமும் ஒரு சில மணி நேரமாவது மக்களுக்காக, பொது நலனுக்காக செலவிடவேண்டியிருப்பதால், ஓரளவுக்கு அவர்களுக்கு கௌரவ ஊதியம் கொடுப்பதில் என்ன கஷ்டம் ? அதற்காக நகராட்சி மன்றம் ஒரு சில லட்ச ரூபாய் செலவழிக்க தயாராக இருக்கிறார்கள். ஆகவே, அரசாங்கம் இதைத் கொடுப்பதற்கு மறுப்பதற்கு அடிப்படை காரணம் என்ன ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : கௌரவ வேலைக்கு தேர்ந்தெடுக்கப் பட்டுவரும்பொழுது டி.எ., ஹானரேரியம் என்று கேட்டுக்கொண்டிருந் தால் அது கௌரவப் பதவி ஆகாது என்பதை கனம் அங்கத்தினர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

திரு. இராம. அரங்கண்ணல் : மாதத்திற்கு இவ்வளவு தொகை என்று கொடுக்கப்படாவிட்டாலும், அவர்கள் கலந்துகொள்கிற கூட்டங்களுக்கு ஏதாவது அலவன்ஸ் வழங்கப்படுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : முன்பு அளித்த பதில் தான்.

திரு. வை. சங்கரன் : தற்பொழுது எம்.எல்.எ. போன்றவர்களுக்கு கௌரவ அலவன்ஸ் கொடுக்கப்படவில்லையா ? இவர்களுக்குக் கொடுத் தால் அடிப்படை தத்துவத்தில் என்ன கெடுதல் ஏற்பட்டுவிடும் ? ஏன் இதில் மட்டும் அரசாங்கத்திற்கு இவ்வளவு பிடிவாதம் ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : சர்க்கார் எப்பொழுதுமே அப்படி இருந்தது கிடையாது என்பதை கனம் உறுப்பினர் அறிவார்கள். சட்ட மன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பால் போய் பணி செய்யவேண்டியிருக்கிறது. முனிசிபல் கவுன்சிலர்களுக்கு அந்த நகர ஏரியாவுக்குத்தான் வேலை செய்யவேண்டி யிருக்கும். அதற்கு ஹானரோரியம் அவசியம் இல்லை என்று சர்க்கார் கருதுகிறது.

திரு. முனு: ஆதி : யூனியன் சேர்மனுக்கு பிக்ஸட் டி.எ. ரூ. 100 கொடுக்கப்படுகிறது. அதே மாதிரி கவுன்சிலர்களுக்கும் கொடுக்க என்ன தடங்கல் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. நா. இராசாங்கம் : ஹானரரி வேலை செய்வதற்கு அலவன்ஸ் கேட்பது பெருமைக்கு வழியில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல் கிறார்கள். ஹானரரியாக வேலை செய்வதற்கு ஒரு பகுதி பணம் கொடுத் துத்தான் ஆகவேண்டும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஹானரேரியம் என்பது கம்பல்ஸரி ஹானரேரியம் இல்லை.

23rd March 1965]

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : ஏற்கனவே ஒன்றும் இல்லை என்று சொல்ல முடியாது. கன்வேயன்ஸ் வைத்திருந்தால் அலவன்ஸ் கொடுக்கிறோம். ஜட்கா, குதிரை வைத்திருந்தால், அதற்கு தனியாக ரூ. 20 கொடுக்கிறோம். செலக்ஷன் கிரேடு முனிசிபாலிடி, செகண்டு கிரேடு முனிசிபாலிடி இப்படி தரவாரியாக அந்த முனிசிபாலிடிக்கும தகுந்த மாதிரி " கன்வேயன்ஸ் அலவன்ஸ் " கொடுக்கிறோம். கார் வைத்திருந்தால் அலவன்ஸ் கொடுக்கிறோம். மதுரை போன்ற பெரிய முனிசிபாலிடிகளில் கார் வைத்திருந்தால் அதற்கு கன்வேயன்ஸ் அலவன்ஸ் கொடுக்கிறோம். ஆகையால், ஹானரேரியம் கொடுக்கவேண்டிய அவசியமில்லை என்று சர்க்கார் கருதுகிறது.

திரு. எம். எஸ். மணி: நகரமன்ற உறுப்பினர்கள் கௌரவமான பதவி வகிக்கிறவர்கள் என்று டி.எ. கொடுக்காத காரணத்தினால் அவர்கள் வேறு வழியிலே பெறுவதற்கு முயற்சி செய்கிறார்களா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : நகராட்சித் துறை சம்பந்தமாக வேலைகள் இருந்தால், அலுவல்கள் இருந்தால், அதற்கு டி. எ. வாங்கிக் கொள்ளலாம் என்று சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறது. மற்ற வேலைகளுக்கு இல்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன் : சிறு சிறு ஊர்களிலே பொது அலுவல்களுக்கு சென்று வருவதில் அதிகச் செலவு ஏற்படாது. சென்னை, மதுரை, கோவை போன்ற பெரிய நகரங்களில் பொது அலுவல்களுக்காக போய்வருவதற்கு போக்குவரத்துச் செலவு கட்டாயம் ஏற்படும். ஆகவே, அவர்களுக்கு அலவன்ஸ் வழங்குவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : ஏற்கனவே தேசீய நெருக்கடி காரணமாக இது " ஷெல்வ் " செய்யப்பட்டது என்று முன்பு கேள்விக்கு பதில் அளித்தேன். இப்பொழுது ஒன்றும் இந்த விஷயம் பரிசீலனையில் இல்லை. கனம் அங்கத்தினர் எழுதி அனுப்பினால் அது பரிசீலிக்கப்படும்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : பஞ்சாயத்து யூனியன் தலைவருக்கு ரூ. 100 அலவன்ஸ் கொடுக்கிறார்கள், ஆனால் முனிசிபல் தலைவர்களுக்கு ரூ. 75 தான் கொடுக்கப்படுகிறது. இந்த நிலைமையை மாற்றி அவர்களுக்கு அலவன்ஸை ரூ. 100-ஆக உயர்த்துவது பற்றி அரசாங்கம் ஆலோசிக்குமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : நகராட்சி சம்பந்தப்பட்டவரையில் ரூ. 75 தான் கொடுக்கிறோம். பஞ்சாயத்து யூனியன் அதிகமான ஏரியா உள்ளது. நன்றாக பரிசீலனை செய்து, திட்டமிட்டுதான் இம்மாதிரி வழங்கப்படுகிறது.

திரு. இராம. அரங்கண்ணல் : வெளியூர்களில் இருக்கிற பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுக்கு அலவன்ஸ் வழங்கப்படுகிறது. சென்னைமா நகரில் பத்து வட்டங்களுக்கு ஒரு ஸர்கிள் கமிட்டித் தலைவர் இருக்கிறார். பஞ்சாயத்து யூனியன் தலைவரைப்போலத்தான் இவரும். எனவே இவருக்கும் இந்த ஊதியத் தொகை அளிக்கப்படுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : ஐந்தாண்டுத் திட்டம் சம்பந்தமாக அதிக வேலைகளை அவர்கள் செய்கிறார்கள் என்ற காரணத்தினால் அது அளிக்கப்பட்டது. பல வருஷ காலமாக இதே முறையில் நன்றாக செயல்பட்டு வருகிறது. அதை இப்பொழுது மாற்றுவதற்கில்லை என்று சர்க்கார் கருதுகிறார்கள்.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.